பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

11 11 2024 **MONDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் **Vadtal**-ல் உள்ள ஸ்ரீ சுவாமிநாராயண் ஆலயத்தின் 200-ஆவது ஆண்டு கொண்டாட்டத்தில் இன்று காணொலி மூலம் பங்கேற்று உரையாற்றுகிறார்.
- உச்சநீதிமன்றத்தின் 51-ஆவது தலைமை நீதிபதியாக நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா இன்று பதவியேற்கிறார்.
- பள்ளிக்கல்வித்துறையில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 500 தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு நிரப்பப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.
- தேர்தல் நேரத்தில் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப கூட்டணி குறித்து முடிவு செய்யப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்கா மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் **Vadtal**-ல் உள்ள ஸ்ரீ சுவாமிநாராயண் ஆலயத்தின் 200-ஆவது ஆண்டு கொண்டாட்டத்தில் இன்று காணொலி மூலம் பங்கேற்று உரையாற்றுகிறார்.

அம்மாநிலத்தில் புகழ் பெற்ற இந்த ஆலயம் பல ஆண்டுகளாக மக்களின் சமூக மற்றும் ஆன்மிக வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

**<<<<<<<>>>>>>**

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா இன்று பதவியேற்கிறார்.

அவருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவி பிரமாணம் செய்துவைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில், குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி டி ஒய் சந்திரசூட் உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

உச்சநீதிமன்றத்தின் 51-ஆவது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கும் நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா, 1983-ஆம் ஆண்டு தில்லி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்துகொண்டார்.

தில்லி மாவட்ட நீதிமன்றத்திலும், பின்னர் உயர்நீதிமன்றத்திலும் பல்வேறு நடுவர் மன்றங்களிலும் வழக்கறிஞராக பணியாற்றினார்.

2005-ஆம் ஆண்டு தில்லி உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்ட சஞ்ஜீவ் கண்ணா, 2019-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு நீக்கம் செல்லும், தேர்தல் பத்திரங்கள் ரத்து உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளை அளித்த உச்சநீதிமன்ற அமர்வில் இடம்பெற்றவர் நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பதவியேற்கும் அவர், ஆறு மாதங்களுக்கு தலைமை நீதிபதியாக இருப்பார்.

**<<<<<<<>>>>>>**

வழக்குகளை விரைவாக முடித்து, நீதியை உரிய நேரத்தில் பெற்றுத்தருவதில் வழக்கறிஞர்களும், நீதிமன்றங்களும் கவனம் செலுத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கே ஆர் ஸ்ரீராம் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கட்டிடத்தையும், செய்யாறு கூடுதல் சார்பு நீதிமன்ற கட்டிடத்தையும் நேற்று திறந்துவைத்து அவர் பேசினார்.

நீதிமன்றங்களை திறப்பதோடு, நீதிமன்றங்களின் பணி முடிவடைந்ததாக கருத முடியாது என்றும், வழக்குகளை விரைவாக முடித்து, வழக்கு தொடுத்தவர்கள் எதிர்பார்க்கும் நீதியை உரிய நேரத்தில் சரியான வகையில் கிடைக்க செய்வதும் நீதிமன்றங்களின் உயரிய நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

சமரச தீர்வு மையங்கள் குடும்ப நல வழக்குகளை தீர்த்து வைப்பதற்கு உதவுகிறது என்றும் தலைமை நீதிபதி குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய சட்ட அமைச்சர் திரு ரகுபதி, நிதி ஆதாரத்திற்கு ஏற்ப தேவைப்படும் இடங்களில் புதிய நீதிமன்றங்கள் கட்டித்தரப்படும் என்று கூறினார்.

செய்யாறு பகுதியில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற வழக்கறிஞர்களின் கோரிக்கையை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பள்ளிக்கல்வித்துறையில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 500 தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு நிரப்பப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(வாய்ஸ் பைட் - அன்பில் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

தேர்தல் நேரத்தில் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப கூட்டணி குறித்து முடிவு செய்யப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுக தலைமையை ஏற்றுக்கொள்ளும் மற்றும் திமுக ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்று ஒத்த கருத்துள்ள கட்சிகளுடன் கூட்டணி அமைக்க தயாராக இருப்பதாக கூறினார்.

அஇஅதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அம்மா மினி கிளினிக் மற்றும் மேல்நிலைபள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அத்திக்கடவு – அவினாசி திட்டத்தை திமுக அரசு முழுமையாக நிறைவேற்றவில்லை என்றும், காவிரி குண்டாறு திட்டமும் நிலுவையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

ஐப்பசி மாத சதய நட்சத்திரத்தையொட்டி, தஞ்சாவூர் பெரிய கோவிலில் நேற்று பெருவுடையாருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

பால், சந்தனம் உள்ளிட்ட 48 வகையான பொருட்களை கொண்டு அபிஷேகம் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து, பெரிய கோவில் வளாகத்தில் ஆயிரத்து 39 பள்ளி மாணவர்கள் பங்கேற்ற மயிலாட்டம், பரதநாட்டியம், பொய்கால் குதிரையாட்டம் உள்ளிட்டவை நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, கடலோர தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், உள் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதியிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்றும், இது அடுத்தடுத்த தினங்களில் மேற்கு திசையில் தமிழகம் மற்றும் இலங்கை கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹிஸ்புல்லா அமைப்பின் மீது பேஜர் மற்றும் வாக்கி டாக்கிகளை கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்ரேலுக்கு உள்ள தொடர்பை அந்நாட்டின் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார்.

**<<<<<<<>>>>>>**

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பு குறித்து கனடா அரசின் நிலைப்பாட்டிற்கு அந்நாட்டில் உள்ள மூத்த பத்திரிகையாளர் திரு **Terry Milewski** கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

**<<<<<<<>>>>>>**

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் கும்பமேளா நடைபெறவுள்ளதையொட்டி, தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மீட்பு ஒத்திகையில் ஈடுபட்டனர்.

**<<<<<<<>>>>>>**

உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கடற்படையின் தாரிணி பாய்மர கப்பல் நேற்று ஆஸ்திரேலியாவின் **Fremantle** துறைமுகத்தை சென்றடைந்தது.

**<<<<<<<>>>>>>**

பூந்தமல்லியில ஆவடி காவல்துறை ஆணையர் சங்கர் தலைமையில் காவல்துறையினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

**<<<<<<<>>>>>>**

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை ஊராட்சிக்கு உட்பட்ட தச்சமலை, குற்றியார் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களை மாவட்ட ஆட்சியர் நேற்று நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

**<<<<<<<>>>>>>**

காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடத்தில் பல்வேறு தொழில் பிரிவுகளை சேர்ந்த பயிற்சியாளர்களுக்கு பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் மேளா இன்று காலை நடைபெறவுள்ளது.

**<<<<<<<>>>>>>**

திருப்பூரில் வெறிநாய் கடித்து 11 பேர் காயமடைந்ததையடுத்து, தெரு நாய்களை பிடிக்கும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

நாமக்கல் மாவட்டம் ராசிபாளையம் மற்றும் மோகனூர் பகுதியில் கால்நடைகளுக்கான சிகிச்சை முகாம் இன்று நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே ராதாபுரம் என்ற இடத்தில் நேற்றிரவு கார் ஒன்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த இரண்டு இருசக்கர வாகனங்கள் மீது மோதியதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

<<<<<<<>>>>>>

சென்னை துரைப்பாக்கம் பகுதியில் மெத்தம் பெட்டாமைன் போதைப்பொருள் வைத்திருந்ததாக நான்கு பேரை மாநகர காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்கா மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Gqeberha**-வில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு, 124 ரன் எடுத்தது.

125 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா 19 ஓவரில், 7 விக்கெட் இழப்பிற்கு 128 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>

எட்டாவது மகளிர் ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டி பீகாரில் உள்ள ராஜ்கீரில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 20-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், நடப்பு சாம்பியன் இந்தியா, ஜப்பான், தென்கொரியா, சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய ஆறு அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு போட்டியில் விளையாட வேண்டும்.

லீக் சுற்று முடிவில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இன்று நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் ஜப்பான் - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் இந்தியா – மலேசியாவை சந்திக்கிறது.

<<<<<<<>>>>>>

அரியலூரில் தேசிய அளவிலான தொழில்முறை குத்துச்சண்டை வீரர்களுக்கான போட்டிகள் நேற்று தொடங்கியது.

இதனை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>